1661

1661
4-65

# சாந்தி

REGISTRAR OF BOOKS SECTION
30 DEC 1965
PUBLIC (INFORMATION AND PUBLICITY) DEPT.

ஆசிரியர் :

செ. பிரியாத்துரை B.A., B.T.

MADRAS RECORD OFFICE
MADRAS

1965

O-,2NPD7,S
N65
68223

எல். ராமசாமி நாடார் & பிரதர்.

எவர்சில்வர் & பித்தளை அலுமினிய பாத்திர
வியாபாரம்.

ஷோரூம் : 7-8, தெற்கு மாட வீதி,
சென்னை-4.

போன் : **72559**

---

உங்கள் 'சாந்தி' நாடக நூல் முயற்சிக்கு
எங்கள் ஆதரவு

★

வளர்க உங்கள் சமாதானப் பணி !

சைகிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கம்
சென்னை-28.

---

N. D. லிங்கம்

ஆட்டோ, ஸ்பிரே பெயின்டிங் ஒர்க்ஸ்

9/2, வீரபெருமாள் முதலி தெரு, மயிலை, சென்னை-4.

மோட்டார், ஸ்கூடர், சைகிள் ஸ்பிரே பெயின்ட்
செய்யப்படும்.

# சாந்தி

MADRAS RECORD OFFICE
MADRAS

ஆசிரியர் :

செ. **பிரியாத்துரை,** B.A., B.T.
52, அப்பர்சாமி கோவில் தெரு,
சென்னை–4

அச்சிட்டவர் :

மாருதி பிரஸ், சென்னை-14

நூல் உரிமை ஆசிரியருக்கே] [விலை : 75 புதுக்காசுகள்

முதற் பதிப்பு : 1957
இரண்டாம் பதிப்பு : 1961
மூன்றாம் பதிப்பு : 1965

O-,2:NPO7,S
N65

## சமர்ப்பணம்

உலகமைதிக்காக ஓயாமல் பாடுபட்ட உத்தமன்
நேருவுக்கு இந்நூல் சமர்ப்பணம்

68223

## நன்றி!

இந்நூல் விளம்பரங்கள் பெரும்பானவை வாங்கித் தந்த தோழர், S.V. வேலு (மயிலை தொகுதி தி.மு.க. செயலாளர்) அவர்கட்கும், விளம்பரங்கள் தந்தவர்க்கும் என் நன்றி!

# முன்னுரை

சென்னை-21, சர் தியாகராயா கல்லூரியில் B. A. முதல் வருடத் தொடக்கத்திலே நான் படிக்குங்கால் எழுதப்பட்ட நாடகம் இது. 1957-ல் முதற் பதிப்பாக வெளிவந்தது; 1961-ல் இரண்டாம் பதிப்பு; இப்போது மூன்றும் பதிப்பு.

இந்நாடகம், ஐந்து அங்கங்களாகப் பகுக்கப்பட்டு ஒன்பான் சுவைகளோ அல்லது ஓரிரண்டு குறைந்தனவோ விரவப் பெற்று, முடிவில் வியப்புச் சுவையுடன் முடியக் கூடிய, 'நாடக சாதி' வகையைச் சார்ந்தது.

உலகிலே போர் மேகங்கள் சூழுவதும், கலைவதுமாக இருக்கும் இந்நேரத்தில், போர் ஒன்று மீண்டும் உலக மெங்கும் பரவின், உலக நிலை என்னவாகும் என்பதை ஓரளவு விளக்க எடுத்துக்கொண்ட முயற்சிதான் சாந்தி என்ற இந்நாடகம்.

இது, அது நடக்கும் இடமான செந்நாட்டு நிலைமையை உத்தேசித்து, அமாவாசை இரவிலே, கொடிய பாத்திர முடன் தொடங்கி, அவலத்தைக் காட்ட இரவு நேரத்திலே முடிவதாகும். இதனுள் வரும் சில பாத்திரங்கள் கொடியன என்ற காரணத்தினுலும், பேரிட்டு அழைக்கவும் இலாயக் கற்றன என்ற தன்மை கருதியும் ஈண்டு பேர் பெறவில்லை. அதே சமயம் செந்நாடென்பது சீனவையும், நடு நாடென் பது அமைதி காக்கும் பாரதத்தையும் மறைமுகமாகக் குறிக்கும். ஹிட்லர் II என்று மற்ருெரு தலைப்பு கதை ஆரம்பத்தில் தரப்பட்டிருப்பது செந்நாட்டின் சர்வாதிகாரி மறைந்த ஹிட்லரின் மறுபதிப்பு என்பதைக் குறிக்கும்.

படிக்க ஏற்றவிதமாய் அமையவேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டும், நடிப்பதற்கு ஏற்ற தன்மையையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை மறவாமலும் எழுதப் பட்ட இந்நாடகத்தை இனி உங்கள் முன்பு தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றேன். குற்றங்குணம் கூறுவீர் என வேண்டு கின்றேன்.

இன்னணம்,

செ. பிரியாத் துரை

மயிலை, சென்னை -4

# அணிந்துரை

''இளங் குழந்தைகள் மணலிலே வீடு கட்டி இன்புற்று விளையாடுவதைக் காணத் தங்கட்கு விருப்பமில்லையா? ஆவியைக் கக்கும் ஆலைகளும்—உயர்ந்து வீங்கிய உப்பரிகைகளும்—மொட்டை அடிக்கப்பட வேண்டும்" என மனப்பூர்வமாகவே எண்ணுகிறீர்களா? பலரின் அழுகுரலிலே, அவர்களின் பொறுக்க முடியாத வேதனையிலே சாந்தி கிடைக்கும் என்று உண்மையாகவே நம்புகிறீர்களா?''

*    *    *

நான் கேட்கவில்லை, இந்தக் கேள்விகளை! இந்தச் சிறு நாடகத்தில் வரும் ஒரு உருவம் கேட்பதாக நண்பர் பிரியாத்துரை B. A. B. T. அவர்கள் தீட்டியிருக்கிறார்கள் !!

''ஒருவருடைய குண இயல்பு எப்படிப்பட்டது! என்று புரிந்துகொள்ள அவரைக் கொஞ்சம் எழுதச் சொல்லி அந்த எழுத்தைப் பாருங்கள்; ஒரு பொருளைப்பற்றி எழுதச் சொல்லி அவருடைய நடையையும் முறையையும் கவனியுங்கள்; அவரோடு கொஞ்ச நேரம் பேசிப் பாருங்கள்!!'' என்று சொல்வார்கள் உள நூல் அறிஞர்கள்.

ஆசிரியர் பிரியாத்துரையின் எழுத்துக்களைப் பார்ப்பவன் நான்! அவரோடு அடிக்கடி பேசும் வாய்ப்புள்ளவன் நான்! வாசகர்கள் இந்த நூலின் மூலம்தான் அவரை அறிவார்கள்!!

அன்பு—அமைதி—சாந்தம்: இம் மூன்றும் அவரிடம் நான் காணும் பண்புகள். இந்த மூன்றும் முரசொலிக்கின்றன ''சாந்தி'' எனும் இந்நூலில்!!

பலாச்சுளை நடை—பளிங்குபோல் தெளிவு—தேன் போன்ற கருத்து—தென்பாங்குத் தமிழர் தித்திப்பு காண்பர் இந்நூலைப் பெற்று, என்று நம்புகிறேன்.

அன்பு,

**அரங்கண்ணல் M. L. A.**

**மயிலை, சென்னை-4**

# சாந்தி அல்லது ஹிட்லர் II

---

## அங்கம் 1

**களம் 1.** இடம் : செந்நாட்டுச் சர்வாதிகாரியின் ஆலோசனை மண்டபம்.

நேரம் : அமாவாசை இரவு.

(ஆலோசனை மண்டபத்தின் ஒரு மூலையிலே, மத யானையின்மீது சிங்கம் பாய்ந்து அதன் மண்டையைப் பிளந்து குருதியை உறிஞ்சிக் கொண்டிருக்கும் சிலை. அதற்குச் சற்று அப்பால், இரண்டு பீரங்கிகள் இருபுறமும் ஒன்றையொன்று வெகுண்டு பார்க்க, அவற்றின் இடையிலே உலக உருண்டை இயங்குவது போன்ற பாவனை. மறு மூலையிலே, கறுத்து நீண்ட முடிகள் உடலை எல்லாம் மறைக்க, சிறுத்த கண்களில் வெறி கொழுக்க, கூர்ந்து வளைந்த நகங்களால் ஆளை அறைந்து கிழித்துக்கொண்டிருக்கும் கொரில்லாக் குரங்கின் சிலை. அதன்மீது கையை ஊன்றிக்கொண்டு செந்நாட்டுச் சர்வாதிகாரி நின்றவண்ணம், இருளைக் குத்திக் கிழிப்பது போல விழியால் ஒரு மூலையை உறுத்திப் பார்த்துக் கொண்டு இருக்கிறான். அவனைச் சுற்றி—இருள்! இருள்! அமோக இருள்!)

(அதுசமயம் கதவு தட்டப்படுகிறது. சிந்தனை கலைந்த சர்வாதிகாரி, கம்பீரமாகக் குண்டு ஒன்று சுடுகிறான், 'வரலாம்' என்பதற்கு அடையாளமாக).

(உடனே பிரச்சாரக் குழுத் தலைவர் வருகிறார்).

**தலைவர் :** சர்வாதிகாரியாரே! வணங்குகிறேன், தாழ்மையாக. வாழ்த்துகிறேன், உளமார. போற்றுகிறேன்......

**சர் :** (அவரைத் தடுத்துப்) போதும்! பிரச்சாரம் இங்கு வேண்டாம்!

தலை : (நமுட்டுச் சிரிப்புதிர்த்து) மன்னிக்க வேண்டும்!

சர் : சரி! உமது போர்ப் பிரச்சாரம் எப்படி இருக்கிறது?

தலை : சந்தேகிகளிடம், தங்கள் நண்பர்—தலைமை விஞ்ஞானி அவர்கள், உலகையே பொசுக்கக்கூடிய சக்தி மிக்க குண்டுகளையும், உதவி விஞ்ஞானி, குண்டு போடுபவர் மட்டும் பிழைக்கத் தற்காப்பு உடையையும் கண்டுபிடிக்க முயல்வதைச் சொல்லி, 'வெற்றி நமதே!' என நம்பிக்கை ஊட்டுகிறேன். அமைதி விரும்பிகளிடம், அமைதி வாழப், போர் தொடுப்போம் என்று சொல்லி, அவர்கள் தலையைத் தடவுகிறேன். மதாபிமானிகளிடம், குமார சம்பவத்தையும், சம்பூர்ண ராமாயணத்தையும் சொல்லிச் சொல்லிச், சூடேற்றுகிறேன்.

சர்: (பெருமையாக) போதும்! எம் உள்ளம் வெடித்துவிடப் போகிறது... ஆனாலும் எம்முடைய வளர்ச்சிக்குத் தடையாக நடுநாட்டு ஜனதிபதி மட்டும், வம்புகள் செய்கிறான். சென்ற போரில், அங்குச் சென்றுவிட்ட எமது சிற்றப்பாவையும், மகள் சாந்தியையும் அனுப்ப மறுக்கிறான். அத்துடன் அவர்களுக்குப் பல தடைகள் விதித்திருக்கிறான், செந்நாட்டான்.

தலை : யார்! பார்த்திபன்தானே! அந்தச் சுண்டெலிதானே!

சர் : சுண்டெலியல்ல, தலைவரே அவன். சூழ்ச்சி மிக்க குள்ளநரி.

தலை : (சிரித்தவாறு) என்ன இருந்தாலும், நம்முடைய சூழ்ச்சிக்கு முன்னே, அவன் ஆட்டுக்குட்டிதான்.

(இருவரும் உரக்கச் சிரிக்கிறார்கள்).

சர் : (சிரித்தவாறு) பிரச்சாரக் குழுத் தலைவரல்லவா. சுவையாகத்தான் பேசுவீர்! சுவையாகப் பேசின உமது வாயில், இதோ—சுவைமிக்க ஒயின் ஊற்றுகிறோம்......டேய்! வேலைக்காரா, கொண்டுவா—ஒயின் இரண்டு.

(ஒயின்வர, இருவரும் பருகிக்கொண்டே பேசுகின்றனர்),

**சர் :** ஆகவே பார்த்திபனின் மதிப்பை......

**தலை :** நான் மட்டம் தட்டுகிறேன். அவன் ஆட்சியைத் தரைமட்டம் ஆக்குகிறேன். என் நாவன்மையை, அவன் நாட்டிலும் காட்டுகிறேன்.

**சர் :** உமது வாயாடித்தனத்தை முதலில் இங்கிருக்கும் சில ஐந்தாம் படைகளுடன், காட்டும். அவன் ஆட்சியைப் புகழும் நம் நாட்டு இளிச்சவாயர்களிடம் காட்டும்.

**தலை :** அப்போழ்து நான் விடை பெறட்டுங்களா?

**சர் :** (கம்பீரமாக) போமய்யா போம்! போய்ப் பிரச்சார பீரங்கிகளை முழக்கும். (தலைவர் போனதும், கோபமாக) அடேய் பார்த்திபா! உலகக் குடும்பத்தில் ஒரே கணவன்தான் இருக்கமுடியும். இன்றிலிருந்து தொலைந்தது உன் மதிப்பு; தீர்ந்தது என் கொதிப்பு (என்று கூறித் தன் கையினின்று ஒயின் பாட்டிலைக் கோபமாய், அகம்பாவமாய் வீசி எறிகிறான். அது பயங்கரச் சப்தத்துடன் தூள் தூளாகிறது).

**களம் 2.**

ஆட்சியவையில்—சர்வாதிகாரியும், அமைச்சரும்: பலரும் அமர்ந்திருக்கின்றனர்).

**சர் :** அமைச்சரே! பின் தங்கிய நாடுகளுடனும், பேராசை பிடித்த சில காம்ரேட்களுடனும் எல்லை உடன்படிக்கைகள் செய்துவிட்டீரா?

**தலை :** செய்துவிட்டேன் அதிகாரியாரே!

**சர் :** அது போகட்டும், நாம் பார்த்திபனுடன் போர் தொடுக்க வழி ஒன்று நீங்கள் காணவேண்டும்.

அமை : அதுவும் கண்டுவிட்டேன், அதிகாரியாரே, அவனை எதிர்த்து ஒரு காட்டுமிராண்டிக் கூட்டமும்! ஏகாதிபத்ய தளபதியும், 'அவனுக்குச் சொந்தமான பகுதியை வசம் செய்துகொண்டார்கள். இது சமயம் நாம் வடகிழக்கு எல்லைப் பகுதிகட்குச்' சொந்தம் கொண்டாடலாம்.

சர் : நல்ல வாய்ப்பு! அந்த ஏகாதிபத்யவாதியுடன் உடனே எல்லை உடன்படிக்கை செய்துகொள். கூடவே, நமது பீரங்கிப் படையுடன் சென்று நடு நாட்டின் வட கிழக்கு எல்லைப் பகுதியை ஆக்ரமிப்புச் செய்!

அமை : தங்கள் பிரியப்படியே!

(அப்போது, ஓரிளைஞன் எழுந்திருக்க).

சர் : (அவனை நோக்கி) என்ன கவிஞரே! வாழ்த்துப்பா பாடப் போகிறீரோ!

கவி : இல்லை. வசைபா பாடப் போகிறேன்.

சர் : ஏன்? என்ன கேடு வந்துவிட்டது, உமக்கு?

அமை : ஒரு வேளை, கவிஞருக்கு வீரத்தை வாழ்த்தும் தகுதி இல்லைபோலும்.

(கூட்டம் 'கொல்'லென, நகைக்கிறது).

கவி : (கோபமாக) வீரத்தை வாழ்த்தும் தகுதி, எனக்கே சொந்தம். ஆனால், அநியாயமாகப் போருக்கு ஆயத்தம் செய்து, அப்பாவி மக்களின் குடல்களை—வெற்றி மாலைகளாக அணிகின்ற ஓநாய்களின் செயலை வாழ்த்தும் தகுதிதான், எனக்கில்லை. மக்களின் பற்களால் சோறு சமைத்து, அவர்களின் செந்நிறக் குருதியினைக் குழம்பெனக் கொண்டு—உண்ணுகின்ற கழுகுகளின் செயலை, ''வெறிச்செயல்'' என்று ஏசும் தகுதிதான் எனக்குண்டே ஒழிய, வீரம் என்று மதிக்கும் தகுதிதான் எனக்கில்லை.

சர் : எம்மை எதிர்க்கிறாய் நீ!

**கவி:** இல்லை. இல்லை. உணர்த்துகிறேன் அதிகாரி யாரே உணர்த்துகிறேன். சற்றுஇரக்கமுடன் சிந்தித்துப் பாருங்கள். இளங் குழந்தைகள் மணலிலே வீடு கட்டி இன்புற்று விளையாடுவதைக் காணத், தங்கட்கு விருப்ப மில்லையா? ஆவியைக் கக்கும் ஆலைகளும்—உயர்ந்து வீங்கிய உப்பரிகைகளும்—கல்வியை வழங்கிடும் கலா சாலைகளும்—மொட்டை அடிக்கப்படவேண்டும் என மனப்பூர்வமாகவே எண்ணுகிறீர்களா? பலரின் அழு குரலிலே—அவர்களின் பொறுக்க முடியாத வேதனையிலே-சாந்தி கிடைக்கும் என்று உண்மையாகவே நம்புகிறீர் களா அதிகாரியாரே, உண்மையாகவே நம்புகிறீர்களா?

**சர்:** நிறுத்து, உன் பேச்சை. எம் எண்ணம், உயர் வானது. உலகத்தை ஒரு குடைக்கீழ் கொண்டுவருவது இந்த பரந்த எண்ணம் கொண்டதற்காக, எல்லாரும் எம்மைப் புகழ்கிறார்கள்.

**கவி:** புகழ்வது, வயிற்றுக் கொடுமையால் இருக் கலாம்.

**சர்:** வாயை அடக்கு!

**கவி:** உங்கள் செயலை உலகம் எதிர்க்கும் என்று சொல்வதை—போர் செய்பவர்களைத் தாக்குவதை—என் வாய் அடக்காது; அதினின்றும் அடங்காது.

**அமை:** நீ கடைசியாக என்னதான் சொல்கிறாய்?

**கவி:** படை தற்காப்புக்கே ஒழிய, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று கொக்கரிக்கவோ, பலரை அங்கமற்றவர்களாக ஆக்கவோ இல்லை எனச் சொல்கிறேன். பேராசையால், பலருடைய இன்பக் கனவுகளைக் கலைத்துவிடும் செயலை, உலகம் எதிர்க்கும் என்று எச்சரிக்கிறேன்! ஆம்! பலமாக எச்சரிக் கிறேன்!

**சர்:** (ஆவேசமாக இருக்கையினின்று எழுந்து) நீ எச்சரித்தாலென்ன? உலகங்கள் யாவும் எதிர்த்தா லென்ன? எறும்பூறும் இடம்கூட, அண்ட சராசரங் களிலே—இனி யாருக்குமேயில்லை.

**கவி:** உங்களுக்கும் கூடத்தானே!

**சர்:** அடக்கமாகப் பேசடா, அறிவிலியே!

கவி: அது, தாங்கள் செய்யவேண்டியது.

சர்: நான் அடக்கத்திற்குப், பேர் போனவன்.

கவி: ...... போனவர்தானே! உள்ளவர் இல்லையே!

சர்: சட், நிறுத்து. ''அடக்கம்'' எனக்கு அடக்கம் என்று சொன்னேனடா முட்டாள்!

கவி: அப்படிச் சொல்வதே, அடக்கமின்மைதான்; அடங்காப்பிடாரி தன்மைதான்.

சர்: எம் சீற்றத்தை, விலைக்கா கேட்கிறாய். ஏ கவி! இதோ தருகிறோம் உனக்கு! (சேனாதிபதியைப் பார்த்து) இந்தக் கவிராயருக்குத் தக்க பரிசளியும். தூக்கிலே இதைத், திவ்யமாக ஊஞ்சலாட்டும். (பின்பு நீதித் தலைவரைப் பார்த்து)—(கவியைச் சுட்டி)—இதை விசாரித்துத் தண்டியும்.

(என்று கட்டளையிட்ட பின்பு, கம்பீரமாகவும், கோபமுடனும் கவிஞரை அடைந்து) ''இந்த வாய்தானே'' பேத்தியது? (எனக்கூறி குத்து வாளால், கண் இமைக்கும் நேரத்துள் கவியின், வாயிலே குத்துகிறான். கவிஞர் வாய்கிழிந்து, இரத்தம் ஒழுகுகிறது).

**கவி:** (சகித்துக்கொண்டு) ''இன்று நான் — நாளை நீர்'' இதுதான் இயற்கையின் சட்டம். நீர் அழியப் போவது திட்டவட்டம்.

சர்: (உரக்க ஆணவமாய்ச் சிரித்தபடி) ஹஹ் ஹஹ்ஹ!...... அழிவு!......அழிவே இல்லாத தேவப் பிறவியடா, நான். முத்தொழிலும் செய்யும் மூர்த்தியடா, நான். உலகையே மிரட்டி வாங்கப்போகும் அணு ஆயுத முதலாளியடா நான் (என்று கூறிப் 'பள பள' என அறைந்தவாறு, கவியைக் கீழே தள்ளி அவர் மீது காலைவைத்து அழுத்தி, நடந்தவண்ணம் போகிறான்).

# அங்கம் 2

**களம் 1.** **இடம் :** நடுநாட்டு அரசவை

நடுநாட்டு ஜனாதிபதி: சமாதான சிற்பிகளே! செந்நாட்டான், நமது சமத்துவ பூமியான நடுநாட்டின் மீது, போர் துவக்கும் ஏற்பாடுகளைச் செய்து வருவது, நாம் அறிந்ததே; அத்துடன் அவனது அகம்பாவத்திற்கு விருந்து வைப்பதுபோல, அவனுடைய தலைமை விஞ்ஞானி வேறு, உலகையே அழிக்கக்கூடிய குண்டுகளைக் கண்டுபிடிக்க முயல்வதும், உலக நன்மைக்காக விஞ்ஞானியைக் கடத்தி வர நாம் அனுப்பிய ஒற்றர்களாலும், வீரர்களாலும் கட்டுக் காவலுடைய அவன் முகத்தைக் கூடப் பார்க்க முடியாமல் போய்விட்டதும் நமக்குத் தெரிந்ததே! இது விஷயமாக, நாம் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி, ஆலோசனை கூறுமாறு வேண்டுகிறேன்.

**சபை உறுப்பினர் :** விஞ்ஞானி, குண்டுகளைக் கண்டு பிடிப்பதற்குள் நாம் செந்நாட்டின் மீது போர் தொடுத்தாலென்ன?

**ஜனா :** நாம் செந்நாட்டான் கொட்டத்தை அடக்க, ஒரு மாதத்துள் போர் தொடுக்கத்தான் போகிறோம். ஆனால், அதற்கு முன்னால், அந்த விஞ்ஞானி குண்டுகளைக் கண்டு பிடித்து விடலாம் என்று, செந்நாட்டு அமைதி இயக்கத் தலைவர், சேதி அனுப்பியுள்ளாரே!

**ஒற்றர் தலைவர்:** ஜனாதிபதி அவர்களே! நாம் படை எடுக்கும் வரை, விஞ்ஞானி குண்டுகளைக் கண்டு பிடிப்பதைத் தாமதம் செய்யவும்—முடிந்தால் அவன் மனதை அமைதித் துறையில் செலுத்தி—அவனை இங்குக்கொண்டு வரவும்—கடைசி ஏற்பாடு ஒன்று செய்துள்ளேன். தங்கள் அனுமதி வேண்டுகிறேன், அதை அமுல் செய்ய.

**ஜனா :** ஏற்பாடு என்னவோ?

ஒ. த: சென்ற யுத்தத்தின்போது இங்கு வந்து தங்கி விட்டு 12 ஆண்டுகளாகவே இங்கு வசித்துவரும் செந்நாட்டானின் சிற்றப்பா மகள் சாந்தி, B.Sc.யை அவ்வேலைக்கு அனுப்புவதே, என் ஏற்பாடு.

ஜனு: அவள் மனப்பான்மை அண்ணன் பக்க மிருந்தால் காரியம் பலன் தராதே!

ஒ. த: இல்லை, இல்லை! அவளுக்கு அமைதியே குறிக்கோள்! நம் பொருளாதார முறைகளே, உயிர்!! நம் நாடே தாய்நாடு!!! எனவே, அவள் மனம்—நம் பக்கம் தான்.

ஜனு: இதுவரையில் அவளைச் செந்நாடு செல்ல அனுமதியாமல், இப்போது மட்டும் அனுமதித்தால்......

ஒ. த: சந்தேகம் எழலாம். ஆனால், அவளும் அவள் தகப்பனும் நம் அனுமதியைப் பெருமலே, கள்ளத் தனமாகச் சொந்த நாட்டிற்கு ஓடிவிட்டதாகப் பறை சாற்றுவோம்.

ஜனு: சரி. சாந்தியை, இங்கு அழைத்து வாரும்.

(சாந்தி அழைத்து வரப்படுகிருள்).

ஜனு: ஒற்றர் தலைவர், உன்னிடம் சொன்னதைச் செயலில் காட்டுவாயா?

சாந்தி: இல்லை; நிறைவேற்றுவேன்.

ஜனு: ஆனுல், செந்நாட்டான் உன் அண்ணனு யிற்றே!

சாந்தி: ஆனுலும், அமைதி இயக்கமும், இச்செந் நாடும் என் தாய் தந்தையர் ஆயிற்றே! அப்படியே நான் அண்ணன் பக்கம் சாய்ந்தாலும், உங்களுக்குப் பெருநஷ்டம் விளையாதே! மேலும் விஞ்ஞானியைத்

திருத்தினுல், அண்ணன் வெறியை நீக்கினுல் செந்நாடும் பிழைக்குமல்லவா?

**ஜனு :** ஆமாம். செந்நாட்டான் தங்கை என்ற முறையில், விஞ்ஞானியைப் பார்க்க, அவனேடு பழக ஏதோ உனக்கு சாத்யப்படலாம். ஆனுல், அவனை மாற்றுவது எப்படி சாத்யப்படும்?

**சாந்தி :** செந்நாட்டு விஞ்ஞானி, இளைஞுனுய் மட்டும் இருந்துவிட்டால், அவன் அறிவை என் அன்பிற்கு அடகு வைக்கும்படி செய்துவிடுகிறேன். பின்பு, அவனை எப்படி வேண்டுமென்ருலும் ஆட்டிப் படைக்க முடியாதா என்ன?

**ஜனு :** விஞ்ஞானி கிழவராய் இருந்தால்...

**சாந்தி :** அறிவுரையாலும், வேறு ஆசாபாசங் களாலும் மாற்றுகிறேன்.

**ஜனு :** இம்முறை உன்னை அனுப்பவேண்டுமென் தற்குக் காரணம்?

**சாந்தி :** ஒருமுறை கூர்ந்த கண்கள் சென்றன; இம்முறை குளிர்ந்த கண்கள் செல்லட்டுமே! வீரம் சென்று புறமுதுகிட்ட இடத்திலே, சாகசம் சென்ருவது வாகை சூடட்டுமே!

**ஜனு :** வட்ட கேடயங்களை அனுப்பித்தோல்வியுற்ற நாங்கள் இம்முறை வட்ட வதனத்தை அனுப்புகிறேம்: ஆனுல், உன் முயற்சி ஒரு மாதத்துள் வெற்றிபெறட்டும். அப்படி ஒரு மாதத்துள், நீ தோல்வி காண்பதாய் இருந் தால், விஞ்ஞானியைக், கொன்றுவிடு. இவ்விஷயத்தில் உனக்கு உதவிசெய்து உன் பேச்சைக் கேட்குமாறு செந்நாட்டு அமைதி இயக்கத்துக்குச் சேதி அனுப்பு கிறேன். இனி, நீ செல்லலாம். வாழ்க அமைதி! வெல்க உன் முயற்சி!

68223
O-12NPD N65

# அங்கம் 3

**களம் 1.**

(சாந்தி செந்நாட்டை அடைந்து, சர்வாதிகாரி யுடன் தங்குகிருள். பின்பு, அந்நாட்டு அமைதி இயக்கத் துடன் தொடர்பு கொள்கிருள். அமைதி இயக்கத்தி லுள்ள பலர், சர்வாதிகாரி கவிஞரைக் கொன்றதற்குப் பழிவாங்கும் வகையில், ஆயுதப் புரட்சி செய்யத் துடிக் கின்றனர். சாந்தி—'அறவழியில் தான் எடுத்துள்ள முயற்சி வெற்றிபெற்ருல் அமைதி வெகு எளிதில் உயிர்ப் பலியின்றி வாழும் என்றும், அப்படி வெற்றி பெருவிடில், நடுநாட்டு ஜனதிபதி படையெடுத்து வரும் போது புரட்சிக் கொடி உயர்த்தின், வெற்றி நமக்கு நிச்சயம் என்றும், அதுவரை அறக்கிளர்ச்சி செய்யு மாறும் கூறி, தீவிரவாதிகளைச் சமாதானம் செய்கிருள். பிறகு விஞ்ஞானியைக் காணப் பலவித முயற்சிகள் செய்து, தோல்வியுறுகிருள். ஒருநாள், அமாவாசை தினத்தில் அவனைக் காணப்போய்ப் பலன் பூஜ்யமாக இரவுநேரத்தில் மாளிகை திரும்புகிருள். மன வேதனை யில் இங்குமங்கும் உலவிப், பெருமூச்செறிகிருள்—அழகி சாந்தி! (அதுபோழ்து...)

அழகி : (தனக்குத்தானே மெள்ள பேசுகிருள்) ஹூம்! உலகத்தை நம்மால் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகமாகவல்லவோ இருக்கிறது. ஆனல், நம் வாக்குறுதி மட்டும் நிறைவேறிவிட்டால், உலகம் 100-க்கு 100 பிழைத்தமாதிரிதான்.

(பின்பு சாளரத்தை நோக்கிவந்து, வான வெளி யைப் பார்த்துப் பெருமூச்செறிந்தபின், மீண்டும் பேசுகிருள்.)

நான் ஏன்தான் அமைதி இயக்கத்துக்கு இத்தகைய வாக்குறுதியைத் தந்தேனே? இதனல் என் அமைதி யல்லவோ பாழாகிறது...ஹூம்......நாசகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் செந்நாட்டு விஞ்ஞானியுடன் பழகி, அவனை ஆக்கவழியில் செலுத்துவதாக நான் தந்த வாக்குறுதி நடக்கக்கூடியதா என்ன? (என்று கூறிக்

கொண்டே தன் அமளிமிசை படுக்கிறுள்). பின்பு குறு குறுப்பு பொங்க...)

''ஆமாம்! அந்த விஞ்ஞானி, வயது உள்ளவரா? அல்லது வயது ஆனவரா?...அழகரா?—இல்லை—மற்ற விஞ்ஞானிகளைப் போலவே இருப்பவரா?''

(என்று எண்ணுகிறுள்! தூக்கம், அவள் கண்களைக் கொஞ்சுகிறது. அவள் உறக்கத்திலே அழகிய கனு காண் கிறுள். பின்பு சுயநினைவற்று, ''விஞ்ஞானி! விஞ்ஞானி'' என முணமுணத்தவாறு, படுக்கையைவிட்டு எழுந்து பக்கத்திலுள்ள கடற்கரையை நோக்கிப் பயங்கரமான அந்த அமாவாசை கறுக்கலில், தன்னந்தனியாக நடந்து வருகிறுள். அவளை எதிர்நோக்கி மற்ருெரு உருவமும் நடந்துவருகிறது. இரண்டும் ஒன்றையொன்று நெருங்கு கின்றன. சற்று நேரத்தில் அழகியும் உருவமும் ஒன்ருே டொன்று மோதுகின்றன. ஒன்றிஞல் ஒன்று ஆரத் தழுவுகின்றன.)

(பின்பு)

உருவம்: (சடாரென விலகி) மன்னிக்கவேண்டும். நான் தூக்க நோயால் எழுந்து வந்திருக்கிறேன். அதஞல் தான் தங்கள்மீது...

அழகி: பரவாயில்லை. நானும் தூக்க நோயால் தனித்து வந்திருக்கிறேன்.

உருவம்: தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

அழகி: (கிண்டலாக) ஏன் துணைக்கு வரவா?... தங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம். வேண்டுமாஞல் நான் உங்களுக்கு வீடுவரை துணையாக வருகிறேன். ஏனெனில், தாங்கள், பாவம் குழந்தையைப்போலத் தென்படுகிறீர்கள்.

உருவம்: ஆயா பாட்டிகளுக்கு நான் குழந்தை தான். (பின் அலட்சியமாகப்) பயமாவது? அப்படி ஒன்று எனக்கு இருப்பதாவது.

அழகி: ஏஞே?

உருவம்: சாவையே சாகடிக்கக்கூடிய எனக்கா பயம். பயத்திற்குத்தான் என்னிடம் அசாத்யமான பயம்.

அழகி: (சந்தேகமாக) ஆமாம்! நீங்கள் யார்?

உருவம்: என்னைத் தெரியாதா உங்களுக்கு?

அழகி: (கிண்டலாக) உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியோ?

உருவம்: புகழ்பெற்ற விஞ்ஞானி இல்லை; பெறப் போகும் விஞ்ஞானி. உலகையே அழிக்கக்கூடிய குண்டுகளைக் கண்டுபிடிக்கப்போகும், செந்நாட்டுத் தலைமை விஞ்ஞானி!

அழகி: அத்துடன், என் அண்ணனின் ஆத்ம நண்பருங்கூட.

உருவம்: யார் உங்கள் அண்ணன்?

அழகி: இப் பார் ஆளும் சர்வாதிகாரி!

உருவம்: செந்நாட்டுத் சர்வாதிகாரிக்குத் தங்கையா? அப்படி ஆனுல்...

அழகி: அவருடைய சிற்றப்பா பெற்ற மகள். என் பேர் சாந்தி.

உருவம்: (முணமுணக்கிறது) சாந்தி!

அழகி: பேரைச் சொல்லும்போது, உங்கட்குக் கூட...

உருவம்: சாந்தி வேண்டும்—என்று சொல்லத் தோன்றுகிறது.

அழகி: (பொய்க் கோபமாக) ஹும்.

உருவம்: எனக்கல்ல சாந்தி! உலகுக்குச் சாந்தி... ஆமாம்! நீங்கள் நடுநாட்டில் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?

சாந்தி : விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவில் வேலை செய்துகொண்டிருந்தேன்.

விஞ்: ஓ விஞ்ஞானப்படிப்பா!

சாந்தி : ஆமாம்......அது சரி, நான் இங்கு வந்ததிலிருந்து தங்களைப் பார்க்கவே முடியவில்லையே!

விஞ்: அப்படிப்பட்ட பாதுகாப்பில் நானிருக்கிறேன்...அதுபோகட்டும்! நீங்கள் முதலாம் வகுப்புப் பட்டதாரியாகத்தானே தேறினீர்கள் ?

சாந்தி: அதிலும் முதலாமவளாக...... பௌதிகத்தில் தங்கக் கோப்பையுடன்.

விஞ்: அப்படியானுல், தாங்கள் ஓர் உதவி செய்கிறீர்களா ?

சாந்தி: (விறைப்பாக) முடியாது.

விஞ்: (வருத்தமுடன்) ஏன் ?

சாந்தி: உதவி செய்யமுடியாது. கட்டளையிடுங்கள் ஊழியம் செய்கிறேன்.

விஞ்: (சிரிப்புடன்) ஓகோ!

சாந்தி: உதவி என்னவோ ?

விஞ்: (கிண்டலாக) ஊழியம் என்னவோ, என்று கேளுங்கள்.

சாந்தி: (அசடு வழிய) சரி சொல்லுங்கள்.

விஞ்: எனக்கு ஓர் உதவியாள் இல்லாமல், கை காலே ஆடமாட்டேன் என்கிறது. தாங்கள் அந்தப்பீடத்தை அலங்கரிக்கலாமே ?

சாந்தி: தடையுமுண்டோ ?

விஞ்: அப்படியானுல் சக்திமிக்க குண்டுகளைக் கண்டு பிடித்துவிட்டேன் என்றே சொல்லலாம்.

**சாந்தி:** ஆமாம் நீங்கள் கோபக்காரர் கிடையாதே!

**விஞ்:** ஏன் சாந்தி?

**சாந்தி:** இப்படிப்பட்ட நாச குண்டுகளை நரமாமிச பட்சணிகள் தானே, கண்டுபிடிக்க வேண்டும்? சாதுவான தாங்களில்லையே!

**விஞ்:** சாந்த்! உலகமே வியக்கக்கூடியதாயிற்றே இச் சாதனை.

**சாந்தி:** இது, சாதனை அல்ல—வேதனை. வியப்பல்ல—விபரீதம்.

**விஞ்:** குண்டால் எனக்குப் பேரும் புகழும் கிடைக்கும்; என் நண்பரோ, இதைக்கொண்டு போரில்லாமலேயே வெறும் பயமுறுத்தலினால் உலகை ஆளலாம்; உலகத் தலைவராகலாம்......

**சாந்தி:** மிஞ்சினால் எல்லாம் சாம்பலாகலாம்......,

**விஞ்:** (கோபமாக,) சாந்த்!

**சாந்தி:** கனவுகள் எல்லாம் நினைவாகாமல் போகலாம். இப்போதே என் அண்ணா ஒரு எதேச்சாதிகாரி; அகம்பாவி! கொடுங்கோல்......!!,

**விஞ்:** (பளீரென்று அறைகிறான் சாந்தியை)உனக்கு, அவரைப்பற்றியும் தெரியாது, அவருக்கும் எனக்குமுள்ள உறவைப்பற்றியும் தெரியாது. நான் விதவை ஒருத்தியின் வேண்டப்படாத மகனாய்ப் பிறந்து, வீதி குப்பையிலே வீசி எறியப்பட்டேன். வறுமையிலும், கொடுமையிலுமாக வளர்ந்து பெரியவனானேன். விஞ்ஞான விஷயங்களில், அளவற்ற ஆர்வத்தோடு உழைத்து வந்தேன். ஆனால், என்னை ஆதரிப்பார் ஒருவரும் கிடைக்கவில்லை. ஒரு சமயம்—சர்வாதிகாரியார் என்னூருக்கு விஜயம் செய்தார். நம்பிக்கையுடன் பேட்டி விரும்பிய எனது ஏக்கத்தைத், தவிர்த்தார். அரை

மணிப் பழக்கத்திலேயே எனது ஆண்டவர் ஆனார்' நானும், அவர் அந்தரங்கம் ஆனேன.

இப்படியாக எங்கள் நட்பு முருங்கைபோல வேகமாக வளர்ந்தது. அப்போது. ஒருநாள் என் ஊருக்குத் தன் மனைவியுடன், வந்து என்னவர் தங்கினார். அவளையும் என்னையும் தனித்து விட்டுவிட்டு, அரசியல் விஷயமாக வெளியே சென்றுவிட்டார். இச்சந்தர்ப்பத்தை அவர் மனைவி நன்கு பயன்படுத்திக்கொண்டாள். என் அழகும் இளமையும் அவளுக்கு விருந்தாகிக் கொண்டிருந்தன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அச்சமயம்—வெளியே சென்றுவிட்ட என்னுயிர் திரும்பினார்; எங்களின் கேவலத்தைக் கண்டார். ஆனல், அமைதியாக என்னை நெருங்கி, நடுநடுங்கிக்கொண்டிருந்த என்மீது அன்பாகக் கை வைத்து, ''அன்பா! ஏன் நடுங்குகிறாய்! இளமையில் தவறு செய்வது சகஜந்தான். ஆனல் பெண்தான் தன்னை அடக்கிக்கொள்ளவேண்டும். அதை, மறந்தாள் இவ்விபசாரி; இவள் அழிந்தொழியட்டும்'', என்று கூறித் தன் மனைவியைச் சுட்டுக்கொன்றார். பின் மீண்டும் என்னை நெருங்கி ''நீ தவறு செய்துவிட்டதாக வருந்தினல், அதற்கோர், பிராயச் சித்தம் செய். உன் முழு நேரத்தையும் விஞ்ஞான ஆராய்ச்சியில் செலுத்திச் சக்திமிக்க குண்டுகளைக் கண்டுபிடி. சிற்றரசான எம்மைப், பேரரசாக்கு; உலக நிலப் பிரபுவாக்கு'' என்றார்.

சாந்தி: ஓ! அத்துணை நல்லவனா! அண்ணன் ?

விஞ்: ஆம்! அவர் ''எடுக்கவோ அல்லது கோக்கவோ!'' பரம்பரையினர்; அவர்தான், எனது மனச்சாட்சி; வழிகாட்டி; வளம்பெருக்கி.

சாந்தி: மன்னியுங்கள். மன்னியுங்கள். மெத்த மன்னியுங்கள். அண்ணனின் பெருமை அறியாமல் உளறிவிட்டேன். என் பேத்தலைத், தயை செய்து பொருட்படுத்தாதீர்கள்.

விஞ்: சாந்தி! அப்படி என்ன வித்யாசமாகப் பேசி விட்டாய் ?......அது போகட்டும்? நீ எப்போது வந்து, வேலையை ஏற்கப்போகிறுய் ?

சாந்தி: இரண்டு நாட்களில்......எதற்கும் இந்த வேலை விஷயமாக அண்ணனிடம் நீங்களும் ஒரு வார்த்தை போட்டு வையுங்கள்.

விஞ்: மறுத்தால் நானல்லவோ துர்ப்பாக்கியசாலி? சரி. செல்லட்டுமா ?

சாந்தி: செய்யுங்கள்.

## அங்கம் 4

களம் 1 (நாட்கள் பல மாஜி ஆனபின் ஓர் நாள்)

(சர்வாதிகாரி தனது பழைய ஆலோசனை மண்டபத்திலே அமர்ந்திருக்கிருன். அதுசமயம் பிரச்சாரக் குழுத் தலைவர் வருகிறுர்).

தலைவர்: வணக்கம் அதிகாரியாரே!

சர்: சேதி என்ன?

தலைவர்: தாங்கள் சொன்னபடியே, யான் போர் பிரச்சார வேலைகளைச் செய்துவருகிறேன்.

சர் : இச்சேதி, எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. வேறு சேதி உண்டா ?

தலைவர்: உண்டு அதிகாரியாரே! நம் நாட்டு மக்களில் பெரும் பகுதியினர், அறமுறையைச் சொல்லிப் போந்த புத்தரையும், மகாவீரரையும், பின்பற்றுபவர்களாக இருப்பதால், புத்தரையும், மகாவீரரையும் காட்டி ஒரு சாரார் உலக அமைதியைப்பற்றி உபதேசம் செய்கின்றனர். நமது முயற்சிகட்கு, முள்வேலி போடுகின்றனர்.

சர்: (கோபமுடன்) ஹூம்! இனி நமது ஆணைக்குட்பட்ட இடங்களில் எல்லாம், புத்தனையோ. வீரனையோ

அல்லது இயேசுநாதனையோ வணங்கக்கூடாது என்று கட்டளையிட்டுவிடுகிறேம். மேலும், இந்தப் புத்த, வீர, இயேசு சிலைகளை எல்லாம் உடைத்துவிடும்படியும் தளபதிக்கு உத்திரவு பிறப்பிக்கிறேம்.

**தலைவர்:** நன்று செய்தீர். மிகமிக நன்று செய்தீர். இந்தக் கோழை மனிதர்களின் சிலையே நமதாட்சியில் இருக்கக்கூடாதுதான்.

**சர்:** ஆம்! புத்தன் கோழைதான், ''பெண்டிற்குப் பிரசவம், ஆண்கட்குப் போர்'' என்ற அரச தர்மத்தை உபதேசிக்காத புத்தனும், மற்றவர்களும் கோழைகள் தான். சரி, நீர் செல்லலாம்.

(தலைவர் சென்றதும், அமைச்சர் வருகிருர்).

**அமை:** அதிகாரியாரே! கவிஞரைக் கொல்லக் கூடாதென்று அமைதி இயக்கம் என்ற ஒன்று அறக்கிளர்ச்சி செய்கிறது.

**சர்:** அடி, உதை; சுடு, தள்ளு.

**அமை:** ஆனுலும்......

**சர்:** மறுபேச்சு வேண்டாம். சொன்னதைச் செய்யும்.

(அமைச்சர் சென்றதும், வேலையாள் ஒருவன் ஓடோடி வருகிருன்).

**வேலை:** அதிகாரியாரே! அதிகாரியாரே! உதவி விஞ்ஞானி தற்காப்பு உடையைக் கண்டுபிடித்து விட்டார்களாம்.

**சர்:** (பெருமையாக) வெற்றிக்கு என்மீது ஏன் இவ்வளவு பிரியம், ஹும்!...... வேலைக்காரா! தலைமை விஞ்ஞானியின் சேதி?

**வேலை:** கூடிய சீக்கிரத்தில் குண்டு செந்நாட்டில்.

**சர்:** பணப்பை உன் கையில் (என்று ஒரு பணப்பையை வீசி எறிகிருன் வேலையாள் மேல்.)

2

களம் 2. இடம் : தலைமை விஞ்ஞானியின் பரிசோதனைச்சாலை.

(சாந்தி விஞ்ஞானியின் மாளிகையிலே நுழைகிருள். விஞ்ஞானியோ பரிசோதனைச் சாலையில் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிருன். யாரையும் சாலைக்குள் அனுமதிக்க வேண்டாமென வேலையாட்களிடம் உத்திரவு இட்டிருக்கிருன். எனவே சாந்தி அம்மாளிகை வாசலில் உலவுகிருள். அவள் கண்களில் நாள்காட்டி (Calendar) தென்படுகிறது. பெருமூச்சுடன் அதைப் பார்த்த வண்ணம் நிற்கிருள்).

(அப்போது அவள் மனச்சாட்சி பேசுகிறது).

ம. சா: என்ன சாந்தி, நாள் காட்டியை உற்றுப் பார்க்கிருய்? நீ இங்கு வந்த பின்பு உலகம் தன்னைத் தானே எண்ணற்ற முறைகள் சுற்றி விட்டிருக்கிறதே எனப் பார்க்கிருயா?............அல்லது வந்த கடமையை முடிக்காமல் விஞ்ஞானியுடன் நீ இழைய, அதற்கு அவன் குழைய, காலமெல்லாம் வசந்த ருதுவாக, வந்து வீசும் தென்றலாக, தெள்ளியதோர் தேனுக, மாறிவிட்டதே என மாச்சரியம் அடைகிருயா?.........சாந்தி! எல்லாப் பெண்களின் உறுதியும் ஓடும் ஊர்தியில் இடப்பட்ட பெட்ரோல்தானடி.

**சாந்தி:** (சற்று உரக்க) இல்லை, இல்லை! நான் முயல்வேன்—முடிப்பேன்!

(அப்போது விஞ்ஞானி பரிசோதனைச் சாலையினின்று வருகிருன்).

**விஞ்:** (மகிழ்ச்சிமிக) அமாவாசை தந்த பௌர்ணமியே எதற்கு முயல்வாய்; எதை முடிப்பாய்?

**சாந்தி:** (பொய்க் கோபமாக) போதும்! போதும்! உங்கள் பேச்சு. நேற்றிரவு பூராவும் கொஞ்சங்கூடச் சாப்பிடாமல் வேலை செய்யலாமா? இதனுல்தான் நீங்கள்

தொடப்பட்ட தொட்டாற் சிலுங்கியைப் போலத் துவண்டிருக்கிறீர்கள்? உங்களின் ஆராய்ச்சி வெற்றி பெற்றதும், நீங்கள் நல்ல உடற் கட்டோடிருந்து புகழின்பம் துய்க்கவேண்டாம்!

**விஞ்:** (அன்புமிக) சாந்தி பெண்ணே! பெண் அன்பு என்றாலே என்னவென்று அறியாத எனக்கு, நீதான் அந்த அன்பினை ஊட்டுகிறாய்.

**சாந்தி:** (ஊடலாக)! ஆகா! இம்மாதிரி தேன் தடவிய வார்த்தைகளைச் சொல்வதும், பின்பு பொழு தெல்லாம் ஆராய்ச்சி செய்வதுமே உங்கள் வாடிக்கை யாய் விட்டது.

**விஞ்:** என்ன சாந்த் செய்வது?

**சாந்தி:** செய்வதா! சற்றுக் கேளிக்கைகளிலும் பொழுதைச் செலவழிப்பதுதான் நீங்கள் செய்ய வேண்டியது.

**விஞ்:** போகட்டும். என் 'புது உறவே!' என்னை நீதான் புளகாங்கிதம் அடையச் செய்யேன்.

**சாந்தி:** அன்றொரு நாளும் இப்படித்தான் கேட்டீர் கள். நானும் நடனம் ஆடினேன். நான் ஆடிக்கொண்டே இருக்கும்போது பாதி நடனத்தில் 'ஹீலியன் வாயு, அஸ்பெஸ்டாஸ்' என்று என்னென்னமோ பிதற்றிக் கொண்டே எழுந்து சென்று ஆராய்ச்சி சாலைக்குள் நுழைந்துவிட்டீரே!

**விஞ்:** (அவள் மோவாய் நிமிர்த்தி, முகத்தை அருகில் சாய்த்து அவள் காதிலே) கோபமா சாந்தி! கோபமுற்ற உன் முகத்துக்கும் காஸ்மரைனுக்கும் வித்யாசமே இல்லை கண்ணே!

**சாந்தி:** சரி, சரி, இதைப் பார்த்தீர்களா? இந்தக் கவிதை எவ்வளவு அழகாக இருக்கிறது?

(என்று கவிதைத் தாளொன்றைக் கொடுக்கிறாள். விஞ்ஞானி அதைப் படிக்கிறான். அதிலே வரும் கதாநாயகியின் பேர் லில்லி).

(படித்து முடிந்ததும்)

விஞ்: சாந்த்! இக்கவிதைகளிலும் சாந்தம்தான் தவழ்கிறது. ஒரு சமயம் இக்கவிஞனின் லில்லிப் பெண் நீதானோ?

சாந்தி: மகா குறும்பர் நீங்கள்.

விஞ்: குறும்புக்கேற்ற உறுபொருள் நீ.

சாந்தி: (ஒயிலாக) ஹூம்!

விஞ்: சாந்த்! உன் பேச்செல்லாம் எனக்குக் காதலின் கூச்சல் கண்ணே!

சாந்தி: சரி, சரி, உடனே போய்ப் பித்த கஷாயம் சாப்பிடுங்கள்.

விஞ்: சாந்த், நானோ தலைவாழைக் குருத்து. நீயோ அவன் வழவழப்பு.

சாந்தி: (செல்லமாகச் சிரித்து) சே! சே! கவிஞர்களல்லவோ தங்கள் காதலியிடம் இப்படிப் பேசுவார்கள். ஒரு விஞ்ஞானி இப்படியா பேசுவது?

விஞ்: (தன் இன்பக்கொத்தை அருகே இழுத்துத் தன்னுள் ஆழப்புதைந்து) பின் எப்படிப் பேசுவது கண்ணே!

சாந்தி: "சாந்தி, நீயோ புவியீர்ப்புத்தானம். நானோ வீழும் பொருள். நீயோ நியுட்ரான்ஸ்—நானோ எலெக்டிரான்ஸ். நான் அணுக்குண்டு—நீ யுரேனியம்" என்று இப்படியல்லவோ அடுக்க வேண்டும்.

(இருவரும் சிரிக்கிறார்கள்).

விஞ்: (ஆசை மிகுதியாக) அழகின் உற்பத்திச் சாலையே! பேசு—இன்னும் பேசு—பசி தீர்ப்பதல்லவா உந்தன் பேச்சு!

சாந்தி: (அவன் இரு கன்னங்களையும் தாங்கிக் கொண்டே) என்னிடம் இவ்வளவு அன்புகொண்ட தாங்கள் நான் சொல்லும் ஒரு யோசனையை மட்டும் கேட்பீர்களா?

விஞ் : என்ன கண்ணே!

சாந்தி : குண்டுகளைத் தயாரித்து யம கிங்கரனுகா தீர்கள். அண்ணனின் கொடுமையைக் குசலம் விசாரிக் காதீர்கள். அவன் வெறிக்கு விருந்து வைக்காதீர்கள்.

விஞ் : (கோபமாக) சாந்த்!

சாந்தி : சாந்தியின் சொந்தக்காரனுகவேண்டிய தாங்கள் சமாதிகளின் சொந்தக்காரனுகாதீர்கள். திமிருக்கு ஊட்டம் கொடுக்காதீர்கள்.

விஞ் : (அவளிடமிருந்து விலகி) இவ்வார்த்தைகள் எனக்குக் கடுமையாக இருக்கிறது சாந்த்!

சாந்தி : (காதலனை அணுகி) கடுமையான கதிரவ னிடமிருந்துதான் இலை அருமையான ஸ்டார்ச்சையும், உலகம் கருமையான மேகத்தையும் பெறுகிறது. நாச கிருமிகளும் நாசமாகின்றன.

விஞ் : (எரிச்சலாக) உன்னை வேண்டுகிறேன். வேறு சேதி இருந்தால் பேசு.

சாந்தி : என்னவோ என் கடமைக்குச் சொல்லி விட்டேன்.

விஞ் : (முணமுணக்கிருன்) கடமை! கடமை!

(கடமை என்ற சொல் அவனுக்குத் தன் கடமையை நினைவுக்குக் கொண்டு வருகிறது. அவன் மனச்சாட்சி பேசுகிறது.)

ம. சா : என்னடா விஞ்ஞானியே. காதல் புரிவதா உன் கடமை! அடப்பாவி! உலகமே மூக்கின் மேல் விரலை வைக்கக்கூடிய அற்புத ராஜன் நீ. நீயா இப்படிக் காலத்தைக் கழிப்பது? உன் கரங்கள் பரி சோதனைக் குழாயைக் கொஞ்ச வேண்டுமே ஒழிய ஒரு பெண்ணையா கொஞ்சிக்கொண்டிருப்பது......வீணனே!

குளோரின் ஆக்சைடு உன்னைக் கூவி அழைக்கிருள் கேள்! (அதுசமயம் குளோரின் ஆக்சைடு பொங்கும் (evaporate) சப்தம் பரிசோதனைச் சாலையினின்று கேட்கிறது) மெக்னீசயம் தையோ சல்பைடு "அருகே வருவாயா என் அன்பா!" என ஏங்கிக் கொண்டிருக்கிருள் பார். ஓடு! ஓடு! ஓடிப்போய் உன் உரிமைக்காரிகளைத் தேற்று.

**விஞ்** : (உரக்க) ஆம்! என் கடமையை மறந்து விட்டேன் என் அன்பே! அயோடின் ஆக்சைடே! இதோ வந்துவிட்டேன். உன்னிடம் குலாவிட வந்துவிட்டேன்.
(என்று கூறிக்கொண்டே, ஓடுகிருன்)

**சாந்தி** : என்ன முட்டாள்தனம் செய்கிறேன்! அவரை நான் ஆட்டிப் படைக்க நினைத்ததுபோய் நானல்லவோ அவர் கைப்பட்டமாகிவிட்டேன்.

### களம் 4

(சாந்தி தனது இருப்பிடத்திலே, அமைதி இயக்கத்திடமிருந்தும், பார்த்திபனிடமிருந்தும் வந்த கடிதங்களைப் படிக்கிருள்.)

தோழியர் சாந்திக்கு,

நாம் கவிஞரைத் தூக்கிலிடக்கூடாதென அறக்கிளர்ச்சி செய்தபோது, அதற்குச் செவிகொடாமல் கவிஞரைக் கொன்று நம் ஊர்வலத்தைச் சுட்டுக் கொடுமை செய்தான் சர்வாதிகாரி. எனவே முந்திய தீர்மானப்படி, மதிப்புமிகு பார்த்திபனுர் படை எடுத்து வருகின்ற இச்சமயத்தில், நாமும் ஆயுதப் புரட்சி துவங்கிவிட்டோம். புரட்சி வெற்றி பெற்றதும், உம்மை விஞ்ஞானி மாளிகையில் சந்திக்கிறோம்.

இன்னணம்,

**பிரியா**

தலைவர், அமைதி இயக்கம்.

காம்ரேட் சாந்திக்கு,

நீ விஞ்ஞானியை ஆக்க வழியில் திருப்புவதற்குக் கேட்ட கெடுவும் முடிந்துவிட்டது. பாதுகாப்பு உடையை உதவி விஞ்ஞானி கண்டுபிடித்ததுபோல, குண்டுகளைத் தலைமை விஞ்ஞானி கண்டுபிடித்துவிட்டால், உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படும். அத்துடன் நாம் செந்நாட்டின்மீது படையெடுத்து வருகிறோம். அதற்குள் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுச் செய்யப்பட்டால், தோல்வி நம்மை ஆரத் தழுவிக்கொள்ளும். எனவே, விஞ்ஞானியைக் கொன்றுவிடும்படி கட்டளையிடுகிறோம்.

இங்ஙனம்,

**பார்த்திபன்**

ஜனாதிபதி, நடுநாடு.

(இதனைப் படித்துவிட்ட சாந்திக்குக் கடமை அழைக்கிறது 'விஞ்ஞானியைக் கொல்!' என்று. ஆனால் காதலோ தடுக்கிறது.)

**கடமை :** ஏன் சாந்தி சிலையாகிவிட்டாய்! உன் பேச்சைப் பொருட்படுத்தாமல், நண்பனுக்காகப் பாடுபடும் விஞ்ஞானியைக் கொன்றாலன்றித் தலைவரின் கட்டளைகளை நிறைவேற்ற முடியாதே என எண்ணுகிறாயா? மடநங்காய்! நாட்டிற்காகத் துணிவு கொள்ளடி! உன் காதலனைக் கொல்லடி.

**காதல் :** கொல்வதா? என் அன்பனின் எந்த மார்பில் புரண்டேனோ, அதே மார்பில் கத்தியைச் சொருகுவதா? என் இதழ் நோக்கிச் சாய்ந்த முகத்தை இம்மண் நோக்கிச் சாயவைப்பதா? ஆரத்தழுவி இறுக அணைத்த என் கரத்தாலேயே, அவர் வாழ்விற்கு அத்தமனம் செய்வதா?

**கடமை :** ஏனடி செய்யக்கூடாது? உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அமைதிக்காக இரஞ்சும் கோடானுகோடி மக்களுக்காக ஏனடி செய்யக்கூடாது?

சாந்தி! இதோ பார்! உன் பேர் வாழும்படி நட! தழைத்துக் குலுங்கும் இச்சுபிட்ச உலகு பிழைப்பதா அல்லது மடிவதா என்பது உன் முடிவில்தான் முடங்கிக் கிடக்கின்றது. உன்னைப் பெற்ற செந்நாட்டின் குரலுக்கு உயிரூட்டு. அதை அமுலாக்கு. பெண்ணால் உலக அமைதி பிழைத்தது என்ற புகழுரையை உண்டாக்கு. ஹும்! பெறு துணிவை—எடு கத்தியை.

சாந்தி: (அலறுகிறாள்) அய்யோ! என் செய்வேன்? கடமையோ கொல் என்கிறது; காதலோ வேண்டாமெனத் தடுக்கிறது...ஆம்! இதற்குச் சீக்கிரம் ஓர் முடிவு காணவேண்டும். (எனக்கூறி வேதனையுடன் உலவுகிறாள்)

களம் 3

(சர்வாதிகாரி மண்டபத்தில் அமர்ந்திருக்கிறான். அச்சமயம் அமைச்சர் ஓடோடி வந்து)

அமை: அதிகாரியாரே! அதிகாரியாரே! பார்த்திபன் நம் தலைநகரை நோக்கிப் படையுடன் வந்துகொண்டிருக்கிறான்.

சர்: (ஆணவமாக) தலைநகரை நோக்கியல்ல அமைச்சரே! தன் தலைவிதியை நோக்கி. ஹும்! நமது முப்படை வீரர்களைக் கொண்டு துள்ளிவரும் அக் கன்றுக் குட்டியைக் கட்டிப்போடும்.

அமை: அதிகாரியாரே! முப்படை வீரர்களில் ஒரு பகுதியினர், அமைதி இயக்கத்துடன் சேர்ந்துகொண்டு ஆயுதப் புரட்சி செய்கின்றனர்!

சர்: நட்டாற்றில் காலைவாரும் அந்த மண் குதிரைகளைச் சின்னாபின்னம் செய்யும்.

அமை: பார்த்திபனின் படைவீரர்கள் வேறு எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். ஆயுத பலத்தில் சமமானவர்கள். ஆகவே...

சர்: வெண் கொடியை உயர்த்திவிட்டு, வெள்ளைப் புறாக்களைப் பறக்கவிட வேண்டுமோ? அமைச்சரே! போர்

புரிவது எண்ணிக்கையுடன் அல்ல—திறமையுடன். பார்த்திபனின் திறமைக்கும், நம் திறமைக்கும் போர் நடக்கட்டும். செந்நாட்டான் படைஞர்கள் திறமையில் மிக்கார் என்ற மேட்டியான வார்த்தை முழங்கட்டும். பார்த்திபன் மடிந்தான் என்ற சேதி எமக்குக் கிடைக்கட்டும். ஹூம்! செல்லுங்கள்.

(அமைச்சர் போகிறார்)

**சர்:** அடேய் பார்த்திபா! எரிகுண்டை நோக்கி வரும் இலவம் பஞ்சே! நீ இனி பஸ்பம்!

(அச்சமயம் வேலையாள் ஒருவன் வந்து)

**சேவ:** அதிகாரி அவர்களே! அதிகாரி அவர்களே! நமது தலைமை விஞ்ஞானி அவர்கள் குண்டுகளைக் கண்டு பிடித்துவிட்டார். பார்க்க வரும்படி தங்களை வேண்டிக் கொண்டார்.

**சர்:** (உணர்ச்சி பொங்க) போதும்! வாயை மூடு (என அவன் வாய்மீது பண முடிப்பை வீசி எறிகிறான். பின்னர்......)

என்ன! விஞ்ஞானி குண்டுகளைக் கண்டுபிடித்துவிட்டாரா? எம் கனவு உருபெறும் காலம் கிட்டிவிட்டதா? உலகம் யாவும் ஆளக்கூடிய நிலை எமக்கு வந்துவிட்டதா? எம் சுண்டு விரல் அசைவிலே உலகத்தின் விதியே சிக்கி விட்டதா? ஹஹ்ஹா! (ஆணவச் சிரிப்பு).

இனி எம்மை எதிர்க்க யாரால் முடியும்? எம் விருப்பத்தின் மேல்தான் இனி உலகமே சுற்றும். எம் பெயருக்கு இனி எங்குமே மதிப்புதான்; மரியாதைதான்; பயபக்திதான். ஹஹ்ஹா (மீண்டும் ஆணவச் சிரிப்பு).

யாம் மக்களின் விதியை நிர்ணயிக்கும் கடவுளாகி விட்டோம். இனி எம் சொல்லே சட்டம், கண் அசைப்பே தண்டனை. எம் விருப்பே வாழ்வு—வெறுப்பே தாழ்வு. ஹஹ்ஹஹ் ஹஹ்ஹா.

இனி எம் காலடியை முத்தமிட்ட வண்ணமே நாடுகள் அனைத்தும் கிடக்கும். நாடுகளென்ன! ஏ! சூரியனின் துண்டமே! (ஒரு பூமி உருண்டையை நோக்கி) இனி நீ கூடச் சூரியனை வலம் வரமாட்டாய்! எம்மைத்தான்வலம் வருவாய்! எம்மைத்தான் வலம் வருவாய். இந்த உலகப் பேரரசைத்தான் வலம் வருவாய் (என்று பலக்கச் சிரிக்கிறான்).

## அங்கம் 5

(தலைமை விஞ்ஞானி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தூங்குகிறான். தன் ஆராய்ச்சி விஷயமாகப் பயங்கர கனவு ஒன்று காண்கிறான். கனவில், தன் குண்டால் விளையும் தீங்குகளும், பிறர் தன் ஆராய்ச்சியினை வெறுப்பதும் நண்பன் அனுபவிக்கும் தொல்லைகளும், சாந்தியின் கூக்குரலும், அறிவுரை பலவும் கேட்கிறது...திடுக்கிட்டு விழிக்கிறான் விஞ்ஞானி!

(விஞ்ஞானியின் அறிவு கத்துகிறது)

அறிவு: கனவில் நீ கண்டதெல்லாம் நினைவாகி விட்டால் ⋮...அறுந்து விழும் கைகளும், ஒடிந்து தொங்கும் தலைகளும், முறிந்து போகும் எலும்புகளும் உன்னையும், உன் நண்பனையும் எப்படிச் சபிக்கும். உலகமே அழிந்து விட்டால் நீ எங்கே! உன் நண்பன் எங்கே!......இதை நீக்க வழி!......ஆம்! நாம் குண்டுகளை உண்டாக்கக் கற்றுத்தரக் கூடாது. நாம் ஏதேனும் பொய் சொல்லி இந்த ஆராய்ச்சியை அழித்துவிட வேண்டும். இனி ஆக்க வழியில் செல்வோம். உலகப்புகழ் பெறுவோம். நண்பனையும் அமைதியின் தூதனுக்குவோம்.

(அச்சமயம் சாந்தி விஞ்ஞானியை அடைகிறாள்)

விஞ் : (மகிழ்ச்சி மிக) உயிரே! உன் அன்பன் குண்டுகளைக் கண்டு பிடித்து விட்டதைமுதன் முதலில் கேட்காதபடி எங்குப் போய்விட்டாய் செல்வமே!

சாந்தி: ஆ! கண்டு பிடித்து விட்டீர்களா ?

விஞ்: சந்தேகமா சாந்த்! இதோ பாரேன் (என்று கூறித் தன்னறையைத் திறக்கிருன் குண்டினை எடுக்க). (அச்சமயம் சாந்தியைஅவள் மனச்சாட்சிதூண்டுகிறது)

ம. சா: சாந்தி! ஹூம்! நல்லதொருகடைசி வாய்ப்பு நழுவ விடாதே! ஹூம்! ஹூம்! உலகைக் காப்பாற்று!

(சாந்தி எடுக்கிருள் கத்தியை. ஆழப்புதைக்கிருள் அவன் விலாப் பக்கம். குருதி பீச்சி அடிக்கிறது. கொப்பளித்துக் கொண்டு பெருகி ஓடுகிறது. விஞ்ஞானி கதறுகிருன்.)

விஞ்: (திரும்பி) ஆ!......நீயா சாந்த்! என்மீது உனக்கு இவ்வளவு அன்பா சாந்த். நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன் சாந்த்!......ஆ! ஆ! உயிரே! என் உயிரைப் போக்கி விட்டதே—உடலைக் குத்தி விட்டதே!...... ஹூம்! அம்மா! அம்மா!......ஹூம்! சாந்த்! அருகே வா! நான் குண்டினை......நண்பருக்குக் கொடுக்காமல் அழித்து விட எண்ணினேன் கண்ணே......திருந்திவிட்ட என்னை இதுவரை...செய்த பாபம் கொன்று...விட்டது போலும்! ...சாந்த்! எங்கே உன் அன்புக்குரிய அமைதி விரும்பிக்கு பிரிவு......மு...த்...த—ம்... கொ...டு......! (சாந்தி முத்தம் கொடுக்கக் குனியும்போது விஞ்ஞானியின் தலையும் தரையில் சாய்ந்து விடுகிறது).

சாந்தி: (கதறுகிருள்) அன்பே! கடமைக்குத் காதலைப் பலிகொடுத்து விட்டேன். அதன் தீராத தாகத்தைத் தணித்துவிட்டேன். மீதி கடனையும் முடித்துவிட்டு உம்மிடம் மன்னிப்புப் பெற இதோ வருகிறேன்...ஓடிய என் உயிரே! உன்னைத் தேடோடி வருகிறேன்! ஆசை துரையே! சின்னேரத்தில் நம் உயிர்கள் ஏக்கம் தீர மருவட்டும்.

(என்று கூறிவிட்டுத் திறந்துள்ள அறையினின்று குண்டினை எடுக்க முயல்கிருள். அதுசமயம் திடுமெனச் சர்வாதிகாரி வந்து நிலைமையை உணர்ந்து அவளைக் கொன்றுவிடுகிருன்).

**சர்:** ஆ! கள்ளி! கொலேகாரி! (அவளேக் குத்தி விடுகிருன். அவள் அலறிவிழுந்து குற்றுயிரும், கொலே யுயிரும் ஆகிருள். அச்சந்தர்ப்பத்தில் அமைச்சரும். பிரச்சாரக் குழுத் தலேவரும் ஒடோடி வந்து......)

**அமை:** அதிகாரியாரே! ஆபத்து! ஆபத்து! மிக மிக ஆபத்து!

**சர்:** ஆபத்திலேயே சேதி தெரியுமா ?

**தலே:** புரட்சிப் படை வெற்றி பெற்றுவிட்டது. பார்த்திபனின் படை வாயிலே நெருங்கிவிட்டது. எல் லோரும் இந்த மாளிகையை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிருர்கள். இனி நாம் ஓடித் தப்பித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லே. சீக்கிரம் வாருங்கள், நமக்காக விமான நிலேயத்தில் விமானம் ஒன்று காத்திருக்கிறது.

**சர்:** (ஆத்திரமிக்க வருத்தமுடன்) ஆ! அப்படியா!

(எனக் கூறியபின் விஞ்ஞானியின் அருகிலேசென்று) மாண்ட என் பிரியா! உன் நண்பனின் கடைசி மரியா தையை ஏற்றுக் கொள்ளப்பா (எனக் கூறித் துப்பாக்கி யால் மரியாதை வேட்டு வெடிக்கிருன்).

(பின்பு தனக்கும் விஞ்ஞானிக்கும் மட்டும் தெரிந்த ரகசிய இடத்தினின்று தற்காப்பு உடையையும், அறையி னின்று குண்டினேயும் எடுத்துக்கொண்டு காரிலேறி அமைச்சர், தலேவர் ஆகியவர்களுடன் விமான நிலேயம் நோக்கிப் பறக்கிருன்).

(இதற்குள் புரட்சி வீரர்கள் தலேமை விஞ்ஞானியின் வீட்டை அடைந்து சாகத் துடிக்கும் சாந்தியைக் காண் கிருர்கள்.)

**சாந்தி:** (வேதனேயுடன் பேசுகிருள்) தலேவரே! உலகத்துக்கு......என் கடமை...ஆற்றிவிட்டேன்...என் காதலரைக் கொன்று...விட்டேன்.

தலை: அன்பு தங்கையே! உங்களைக் கொலை செய்தது யார் சொல்லுங்கள்.

சாந்தி: (மெல்ல நகைத்து) என் அருமை அண்ணா!

தலை: சர்வாதிகாரியா! அவன் எங்கே! அவன் தொலைந்தால்தானே போர் வெறி தொலையும்.

சாந்தி: அவன் ......விமான ......நிலையம் ......நோ ...க்...கி...ப்...போகிறான்...அவனை... எனக்காக...மன்னி ......யுங்கள்...... (என்கிறாள். அவள் ஆவியும் பிரி கிறது.)

(அவள் அண்ணனை மன்னிக்கும்படி கூறியதைக் கூடக் கவனிக்காமல், புரட்சியாளர்கள் விமான நிலையம் நோக்கி ஓடுகிறார்கள். அதிகாரியும், மற்றோரும் நுழைந்து விமானத்தில் ஏறிக்கொண்டனர். புரட்சி யாளரும் நிலையத்துள் புக முயல்கின்றனர். அமைச்சரும் விமானத்தை அவசர அவசரமாகக் கிளப்ப முயல்கிறார். இயந்திரத்தில் பழுது இருப்பதால் விமானம் கிளம்பமறுக் கிறது. மக்களும் நிலையத்துள் நுழைந்து விடுகிறார்கள், இதைக்கண்ட சர்வாதிகாரி அவசர அவசரமாகத் தற் காப்புஉடையை அணிந்தவாறே விமானத்தினின்று ஓடு கிறான். வீரர்கள் சூழவே, ஆத்திரத்தில் குண்டுகளை அர்ப்பணித்து விடுகிறான்),

(உடனே பல் கோடி பேரிடிகளின் ஒன்றுபட்ட சப்தம் கேட்கிறது. கோடி கோடி சக்தி மிக்க மின்னொளி பளிச்சிடுகிறது. கடல் நாலாபக்கமும் பொங்கி எழுகிறது. உலகம் யாவும் ஒருங்கே அழிந்து விடுகிறது. மனித இன மெல்லாம் சாம்பலாகி விடுகிறது. எங்கும் அமைதி. அமைதி, ஒரே கொடூர அமைதி. எங்குமே புல்லில்லை; பூண்டில்லை; வாழ்வில்லை; ஜீவராசியேயில்லை. அந்த சூன்ய அரங்கிலே பாதுகாப்பு உடையால் பிழைத்துக் கொண்ட செந்நாட்டான் மட்டும் ஒரு மூலையிலே உயி ரோடு தூக்கி எறியப்பட்டான். அவன் மீது ஒரே ஷவி மணற் குவியல். சிறிது நேரம் கழித்து மெள்ள எழுந் திருக்கிறான், ''மதிப்பு மிகு சர்வாதிகாரி'').

சர் : (கண்கள் உடையால் மூடப்பட்டிருப்பதால் நடந்ததைப் பார்க்க முடியவில்லை. அமைச்சரும், தலைவரும் உயிரோடு இருப்பதாகப் பிரமை கொண்டு பேசுகிறான்.)

அமைச்சரே! மக்கள் எங்கே! அவர்கள் உலைந்து விட்டனரா? நான் போட்ட குண்டிலே அவர்கள் உடலம் தீய்ந்து விட்டதா? எலும்புகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக எறியப் பட்டனவா! சொல்லுங்கள் அமைச்சரே! என் குண்டினால் அவர்கள் சூலுற்ற கன்னியைப்போல, அறுக்கப்பட்ட கோழியைப் போலத் துடிதுடித்தனரா? அவர்கள் கபாலம் வெடித்து விட்டதா? மூளை குழம்பாகிக் குருதியுடன் சேர்ந்து கொதிக்கிறதா? சொல்லுங்கள் அமைச்சரே! என் காது திகட்டும்படியாக அவர்கள் காலம் முடிந்து விட்டதைச் சொல்லுங்கள்....ஐயோ! ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? திடீரென்று என் மீது என்ன விரோதம் கொண்டு விட்டீர்கள்?

தலைவரே! நீங்களாவது பேசுங்களேன்? ஐயோ! ஒன்றுமே பேசமாட்டீர்களா? உங்களுக்கு வாழ்வு தந்து சிறப்பித்த என்னுடன் அளவளாவ மாட்டீர்களா? என்னைக் கைவிட்டுவிட, உதாசீனம் செய்துவிடத் தீர்மானித்து விட்டீர்களா? அட, நன்றிமறந்த கீழினங்காள்! நீங்கள் ஒன்றும் என் ஐயங்களைத் தீர்க்கவேண்டியதில்லை. நானே என் கண்ணார உலகிற்கு நேர்ந்தனவற்றைப் பார்த்து விடுகிறேன்.

(என ஆத்திரமுடன் கூறித் தன் கண்களை மறைக்கும் துணியை மட்டும் எடுக்கிறான். அவன் கண்கள் பொசுங்கி விடுகின்றன விஷப்புகையால்).

ஐயோ! கண்கள்! என் கண்கள் எங்கே! அம்மா! அம்மா! ஒன்றுமே தெரியவில்லையே! என் கண்களில் இருள் சூழ்ந்துவிட்டதே!! உலகத்தை இனி நான் பார்க்க மாட்டேன் போலிருக்கிறதே.

அம்மா! கண்மூடித்தனமாக அலைந்தேன்! இன்று என் கண்கள் மூடிக்கொண்டன. உலக வாழ்க்கையின்

ஒளியைப் போக்கினேன். இன்று என் கண்களின் ஒளி போய்விட்டது. வாழத் தேவையாம் குணத்தை இழந்தேன். இன்று பார்க்கத் தேவையாம் கண்களை இழந்து விட்டேன்.

ஐயகோ! இன்பமே இனி இல்லாதபடிச் செய்து விட்ட ஆணவத்தின் மூலபலம் நான். இருக்கப்பட்ட உலகில் இல்லாமை உண்டாக்கிய குரூரத்தின் இலக்கணம் நான். உலகின் கலகலப்பைச் சமாதி செய்து விட்டக் கொடுமையின் காவலன் நான். எனக்கு இனி பழுத்த இன்பம் எங்கே! பஞ்சு மெத்தை எங்கே! கொஞ்சிப் பேசும் குதலை மொழிச்சிறூர் எங்கே!

பொறுமையில் சிறந்த பூமி மாதாவே! ஊரெல்லாம் இடுகாடாய், உலகெல்லாம் நாளுடும் ஊழிக்கூத்தாய் ஆக்கிவிட்டேன். உயிர்களைத் தகனம் செய்துவிட்டேன். இன்பத்திற்கு உத்தரகிரியை நடத்திவிட்டேன். ஏமயான அவனியே! புயலாக உருவெடுத்துத் தூசி எனை வீசி எறி. பூகம்பமாக மாறிப்பொடியன் என்னை விழுங்கி விடு. குமுறும் கடல் ஒன்று சேர்ந்து குதிக்கட்டும். குன்று நிகர் கற்களெல்லாம் வீழட்டும். கூர் மழுங்கிய கத்தி பல சிறுகச் சிறுகக் கொந்தட்டும். கொந்தட்டும்!

(என்று கூறிக்கொண்டே தபதபவெனப் பைத்யம் போல் ஓடுகிறுன்). அவனைச் சுற்றி நாலாப் பக்கங்களிலும் பொங்கி வரும் கடல்நீர் சூழ்ந்து நெருங்குகிறது.

(சற்று நேரத்தில் காற்றுப் பையிலுள்ள காற்று வேறு தீர்ந்து விடுகிறது).

ஐயேர! ஐயோ! என்ன இது? என் மூச்சு வேறு முட்டுகிறதே. காற்றுப்பையிலுள்ள காற்று வேறு காலியாகிவிட்டதே. உடையை எடுத்து விட்டும் என்னுல் சுவாசிக்க முடியாதே! உலகக் காற்றை எல்லாம் விஷமாக்கி விட்டேனே! அந்தோ அது என்னை வறுத்துப் போட்டுவிடுமே!

1-A
2-104



ஆ! ஆ! அய்யய்யோ! அம்மா! இருதயம் வெடித்து விடும்போல் இருக்கிறது. புப்புசம் கிழிந்து விடும்போல தோன்றுகிறது. ஆம்! வேறு வழியில்லை. காற்றுகுறைந்த இந்த உடையுடன் மாள்வதை விட, உடையைக்களைந்து விட்டு ஒரேயடியாக ஒழிந்து விடுவதே மேல்.

ஐயோ! என் காலம் சமீபித்துவிட்டது. உலகின் கடைசி ஜீவராசியாக ஆக வேண்டிய நேரமும் நெருங்கி விட்டது. ஓயட்டும் என் ஜீவன். நெளியட்டும் இவ் வீணன். முற்றட்டும் என் வாழ்வு! முடியட்டும் என் தொடர்கதை! ஆம்! ஆம்!! ஆம்!!! முடியட்டும்! முடியட்டும்!! முடியட்டும்!!!

(என்று கூறி முகமூடியைக் கிழிக்கிறான். முதலில் நாவும், உதடும் கருகி விடுகிறது. வாய் குழறுகிறான். வாய்வழி விஷக்காற்று உட்புகுந்து அவன் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. எலும்புக் கூட்டின் உருவிலே இம் மண்மீது சாய்கிறான். பொங்கிச் சூழ்ந்த கடல், உலகை, அவன் எலும்புக் கூட்டுடன் விழுங்குகிறது. தன்பிணத்தைக் கொத்தித் தின்ன ஒரு கழுகு கூட இல்லாத நிலையிலே அவன் வாழ்வு சாகிறது).

O-,2NPD7,S
N65

முற்றிற்று

68223

உன்னதமான காபித் தூள் !

உயர்ந்தரக வெண்ணெய்!

# கிரிஜா காபி ஒர்க்ஸ்

5/76, இராயப்பேட்டை நெடுஞ்சாலை

மைலாப்பூர், சென்னை-4

உரிமையாளர்,

மு. இராமானுசம்

வித விதமான பாத்திரங்கள் !

வினோத மிகு பொருட்கள் !!

விலையோ சிறிது ! பலனோ பெரிது !!

# A. தங்கவேல் நாடார் & சன்ஸ்

எவர்சில்வர், பித்தளை, அலுமினிய பாத்திர வியாபாரம்

139, ராமகிருஷ்ண மடச் சாலை,

மயிலை, சென்னை-4

போன்: 75562

1-A
2-104

உல்லாசமான தங்குமறைகள் !

உயர்ந்தரக சைவ உணவுவகைகள் !

மதிப்பிற்குரிய சூழ்நிலை !

மனதிற்குகந்த சுகாதாரம் !

# சாந்தி விகார்

(லஸ் முனை, மயிலை, சென்னை)

போன் : **71113**

## வாழ்த்துக்களுடன்

# சோலார் பர்னிஷர்ஸ்

**உயர்ந்தரக அலமாரி**
**அழகு பொருள் செய்வோர்**

18-A, பிராட்வே, சென்னை—1.

போன் : **29455**